சுற்றுநிருப இலஃ 93/06

எனது இல: விபுபாத/1/9
விளையாட்டுத்துறை, புறப்பாடவிதான
நடவடிக்கைகள் கிளை
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
''இசுருபாய''
பத்தரமுல்ல.

மாகாணக் கல்விச் செயலாளர்களுக்கும்,
மாகாணக் கல்வி பணிப்பாளர்களுக்கும்,

## உடற்கல்வி ஆசிரியர்களின் நியமனங்களும் இடமாற்றங்களும்

உடற் கல்வி மற்றும் விளையாட்டுக்கள் படிப்பிப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை, உடற்கல்வி விளையாட்டு ஆசிரியர்களுக்காக நாடு பூராவும் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்குப் போதியதாக இல்லையென்பது காணப்பட்டுள்ளமையினால், உடற்கல்வி, விளையாட்டு ஆசிரியர்களின் நியமனம், மற்றும் இடமாற்றம் தொடர்பாக பின்வரும் கொள்கையை கல்வி, உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

| | |
|---|---|
| 01. மாணவர் தொகை 2000 மாணவர்களை விடக்கூடுதலாக உள்ள பாடசாலைகள் | இரு ஆசிரியர்கள் |
| 02. மாணவர் தொகை 2000 மாணவர்களுக்கு மேற்படாத பாடசாலைகள் | ஓர் ஆசிரியர் |
| 03. கல்வி, உயர்கல்வி அமைச்சின் அதிகாரத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற விளையாட்டுப் பாடசாலைச் செயற்திட்டம் செயற்படுத்தப் படுகின்ற பாடசாலைகள் | ஐந்து ஆசிரியர்கள் வரை |
| 04. தேசிய பாடசாலைகள் | மூன்று ஆசிரியர்கள் வரை |

உடற்கல்வி, விளையாட்டு ஆசிரியர்களின் சகல நியமனங்களும், இடமாற்றங்களும், உரிய பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்/ உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) இன் விதந்துரைப்பின் மீதும் சேவையின் தேவையின் மீதுமே செயற்படுத்தப்படுதல் வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகிறது.

மேற்குறித்த தீர்மானத்திற்கமைய மேலதிகமானவர்களாகக் காணப்படுகின்ற சகல ஆசிரியர்களையும் வெற்றிடங்கள் நிலவுகின்ற பாடசாலைகளுக்கு உடனடியாக இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

எம். டி. டி. பீரிஸ்,
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு.

| | | |
|---|---|---|
| பிரதிகள்: | 1. வலயப் பணிப்பாளர்கள்<br>2. கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்<br>3. சகல உடற்கல்வி பி.க.ப/ உ.க.ப | தகவலுக்காகவும் உரிய நடவடிக்கை களுக்காகவும் |